# ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க ஒருபோதும் இடமளிக்கவே மாட்டோம்!

## மொட்டுவின் செயலர் சாகர திட்டவட்டம்



"தற்போதைய ஜனாதிபதியின் பதவிக் காலம் முடிவடைந்த கையோடு ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதே எமது கட்சியின் நிலைப்பாடாகும். எனவே, தேர்தலை பிற்போடுவதற்கு முயற்சிகள் இடம்பெறும் பட்சத்தில் அதற்கு ஆதரவு வழங்கமாட்டோம்" - என்று "ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படும் நபருக்கு அப்பதவியை வகிப்பதற்குக் கால எல்லை ஒன்று இருக்கின்றது. நாடாளுமன்றத்துக்கும் அப்படிதான். "ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி என்பது ஜனநாயகத்துக்காகப் போராடும், குரல் கொடுக்கும் கட்சியாகும். மஹிந்த ராஜபக்ச காலத்தில் முன்கூட்டியே தேர்தல்கள் நடத்தப்பட்டன. தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டன என்ற குற்றச்சாட்டு இல்லை.

எனவே, குறித்த காலப்பகுதியில் தேர்தல் நடத்தப்பட்டு, மக்களின் ஜனநாயக உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம். மக்களுக்கு உள்ள இந்த ஜனநாயக உரிமையைப் பறிப்பதற்கு நாம் இடமளிக்கமாட்டோம். அந்தவகையில் உரிய காலத்துக்குள் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும். 2 ▶

மாலைக்கதிர்
Maalaikkathir

யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!
A new brand from Jaffna!
பூஆடை
PooAadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 23 செவ்வாய்க்கிழமை 10.10.2023 கதிர் 89

## நாட்டின் எதிர்காலம் தொழிநுட்பம் மற்றும் பசுமைத்துறையிலேயே தங்கியுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



நாட்டின் எதிர்காலம் தொழிநுட்பம் மற்றும் பசுமைத் துறை என்பவற்றிலேயே தங்கியுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கிறார்.

இதனை இலக்காகக் கொண்டு பயணிக்க வேண்டும் எனவும் அவர் அனைவருக்கும் அழைப்பு விடுத்தார்.

தேசிய தகவல் தொழிநுட்பம் மற்றும் வர்த்தக செயல்முறை முகாமைத்துவத் தொழில் கண்காட்சி இன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தேசிய தகவல் தொழிநுட்பம் மற்றும் வர்த்தக முகாமைத்துவ வாரத்தை ஆரம்பித்துவைக்கும் முகமாக இந்தக் கண்காட்சி, நாளையும் நாளை மறுதினமும் கொழும்பு, சிறிமாவோ பண்டாரநாயக்க 2 ▶



## அலி சாஹிர் மௌலானா நாடாளுமன்றுக்கு தெரிவு

கடந்த வெள்ளிக்கிழமை உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை அடுத்து நஸீர் அஹமட்டின் இடத்துக்கு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக அலி சாஹிர் மௌலானா இன்று தெரிவு 2 ▶

## ஞாயிறன்று புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றவிருந்த மாணவி விபத்தில் மரணம்

அநுராதபுரம், தலாவ பிரதேசத்தில் எரிபொருள் பௌசர் ஒன்று மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மீது மோதி இடம்பெற்ற விபத்தில் 10 வயது மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தலாவ பிரதேசத்தைச் சேர்ந்த தரம் 5 இல் கல்வி கற்கும் டபிள்யூ. நிசல்யா நெத்சரணி விமலசேன என்ற மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த மாணவி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள புலமைப் பரிசில்பரீட்சைக்கு முகம்கொடுக்கவிருந்த நிலையில் நேற்று இரவு இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்துள்ளார்.

கொழும்பு - சபுகஸ்கந்த பகுதியில் இருந்து அனுராதபுரம் நோக்கிப் பயணித்த எரிபொருள் பௌசர், தலாவ நகர சுற்றுவட்டத்தில் 2 ▶

## தென்மராட்சியில் இளைஞரைத் தாக்கி பத்து இலட்சம் பெறுமதியான பொருட்கள் கொள்ளை

### 3 பெண்கள் உள்ளிட்ட அறுவர் விளக்கமறியலில்

இளைஞர் ஒருவரைத் தாக்கிப் பணம் உள்ளிட்ட 10 இலட்சம் பெறுமதியான பொருட்களைக் கொள்ளையடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 6 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 24ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 27 ஆம் திகதி சந்தேகநபர்கள் தொலைபேசி ஊடாகத் தொடர்பு கொண்டு இளைஞர் ஒருவரை மறவன்புலவு பகுதிக்கு வரவழைத்துள்ளனர்.

அங்கு இளைஞரைத் தாக்கி அவரிடமிருந்த நான்கரைப் பவுண் தங்க நகைகள், இரண்டு கையடக்கத் தொலைபேசிகள், கைக்கடிகாரம் உள்ளிட்ட 2 ▶



## யாழ். மாவட்ட முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் இன்றைய தினம் கவனவீர்ப்புப் போராட்டம்

செயலி மூலம் முச்சக்கர வண்டிச் சேவையினை மக்கள் பயன்படுத்தி வருவதன் காரணமாக, தாம் பாதிப்பினை எதிர்கொண்டுள்ளதாகவும் அதனை நிவர்த்தி செய்யுமாறு கோரியுமே இப்போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இன்று காலை பண்ணையில் அமைந்துள்ள தூர இடங்களுக்கான பேருந்து நிலையத்திலிருந்து ஆரம்பமான பேரணி, யாழ் நகரில் உள்ள வீதி வழியாக வருகை தந்து இறுதியில் கடற்றொழில் அமைச்சரிடம் மகஜர் ஒன்றினையும் கையளித்து நிறைவு பெற்றது. (01)

## அமைச்சர் ஜீவன் ஜெனிவா பயணம்

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் சுவிஸ் தலைநகர் ஜெனிவாவுக்கு இன்று பயணமாவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

உலக நாடுகளில் உள்ள தொழிற்சங்கங்கள் பங்கேற்கும் சர்வதேச தொழிற்சங்க மாநாட்டில் பங்கேற்பதற்காகவே அமைச்சர் ஜெனிவா செல்கின்றார்.

ஐந்து வருடங்களுக்கு 2 ▶

# பல்கலை விடுதிகளை இரவு வேளை சோதனைக்கு உட்படுத்தத் தீர்மானம்

## உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

பல்கலைக்கழக விடுதிகளை இரவு வேளைகளில் சோதனைக்கு உட்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

பல்கலைக்கழக விடுதிகளில் இடம்பெறும் பகிடிவதைகளைத் தடுப்பதே இதன் நோக்கமாகும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“விடுதிகளில் நள்ளிரவு 12 மணி முதல் அதிகாலை 5 மணி வரையான காலப்பகுதியில் அதிகளவிலான பகிடிவதைகள் இடம்பெறுகின்றன என்று கிடைக்கப் பெற்ற தகவல்களுக்கு அமைய இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காகப் பல்கலைக்கழக ஒழுக்காற்று அதிகாரிகள் மற்றும் மாணவ ஆலோசகர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

அவர்களுக்குத் தேவையான போக்குவரத்து மற்றும் வாகன வசதிகள் வழங்கப்படும்.

பல்கலைக்கழகங்களில் பகிடிவதையைத் தடுப்பதற்கான தேசிய குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது.

பகிடிவதை சம்பவங்கள் தொடர்பில் முறைப்பாடுகளை மேற்கொள்வதற்காக வட்ஸ் அப் இலக்கமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்று வருகின்றன.

கிடைக்கப்பெறும் அனைத்து முறைப்பாடுகள் தொடர்பிலும் விரைவான விசாரணைகள் ஆரம்பிக்கப்படும்.” - என்றார். (அ)

# சென்னையிலிருந்து குடத்தனை வந்த தாயும், இரண்டு பிள்ளைகளும் கைது!

தமிழகக் கடற்றொழிலாளர்களின் படகின் மூலம் சட்டவிரோதமாக இலங்கை திரும்பிய மூவர் பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையில் போர் நடைபெற்றபோது 1990 ஆம் ஆண்டு யாழ். வடமராட்சி கிழக்கு, குடத்தனை வடக்கைச் சேர்ந்த தாயாரும் அவரது ஆண் பிள்ளையும், பெண் பிள்ளையும் தமிழகத்துக்குச் சென்று சென்னையில் 30 வருடங்களாக வாழ்ந்து வந்துள்ளனர்.

அந்நிலையில், சென்னையில் தொடர்ந்து வாழ முடியாத நிலையில் மூவரும் தமிழகக் கடற்றொழிலாளர்களின் உதவியுடன் படகு மூலம் யாழ். வடமராட்சி கிழக்கு - குடத்தனைப் பகுதியில் வந்திறங்கி உறவினர் வீடு ஒன்றில் தங்கியிருந்த நிலையில் பருத்தித்துறை பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

# கைக்குண்டுடன் இளைஞர் கைது

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் கைக்குண்டு ஒன்றுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

வடமராட்சி, துன்னாலைப் பகுதியில் நெல்லியடி பொலிஸார் நேற்று மேற்கொண்ட விசேட நடவடிக்கையின்போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்ற குற்றச் செயல்களுடன் அந்த நபருக்குத் தொடர்பு இருக்கின்றது எனவும், வவுனியாவைச் சேர்ந்த அந்த நபர் நீண்ட காலமாகத் துன்னாலைப் பகுதியில் வசித்து வந்தார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரைப் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அதேவேளை, அல்வாய் பகுதியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பருத்தித்துறை பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய ஒருவரைக் கைது செய்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

## அமைச்சர் ஜீவன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு தடவை நடைபெறும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்க இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும், சர்வதேச விவகாரங்களுக்கான பொறுப்பாளரும், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவருமான பாரத் அருள்சாமி, அமைச்சரின் ஆலோசகர் ஹரித்த விக்கிரமசிங்கவும் அமைச்சருடன் செல்கின்றனர்.

சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் பணிப்பாளரையும் இவ்விஜயத்தின்போது சந்தித்து அமைச்சர் பேச்சு நடத்தவுள்ளார்.

அத்துடன், ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடல்கள் இடம பெறவுள்ளன.

“மலையகம் - 200“ நிகழ்வு தொடர்பாகவும் சர்வதேச சமூகத்துக்கு தெளிவுபடுத்தப்படவுள்ளது.

## தென்மராட்சியில் இளைஞரைத் தாக்கி

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

10 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களையும், அவரிடமிருந்த 50 ஆயிரம் ரூபா பணத்தையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட இளைஞர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்ட முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் சிலாபத்தைச் சேர்ந்த 3 பெண்களும், கனகராயன்குளத்தைச் சேர்ந்த இரு ஆண்களுமாக ஐவர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் நகைகளைக் கொள்வனவு செய்த வவுனியாவைச் சேர்ந்த கடை உரிமையாளர் அவற்றை உருக்கி தங்கத் தட்டுகளாக மாற்றிய நிலையில் கைது செய்யப்பட்டார்.

விசாரணைகளின் பின்னர் 6 சந்தேகநபர்களையும், சாவகச்சேரி நீதிமன்றத்தில் நேற்று முற்படுத்தியபோது அவர்களை 24ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (அ)

## ஞாயிறன்று புலமைப்பரிசில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெற்கிலிருந்து வந்த மோட்டார் சைக்கிள் மீது மோதி விபத்துக்குள்ளானது.

மோட்டார் சைக்கிளில் உயிரிழந்த மாணவியும், அவரது தாயும் பயணித்துள்ளனர்.

படுகாயமடைந்திருந்த நிலையில் இருவரும் தலாவ பிரதேச வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது மாணவி உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பில் பௌசர் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக தலாவ பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## அலி சாஹிர் மௌலானா ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டுள்ளார்.

இந்தத் தீர்ப்பு அரசியல் கட்சிகளுக்கு ஒரு முக்கியமான முன்னுதாரணமாக அமைவதாக அலி சாஹிர் மௌலானா தனது டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

மட்டக்களப்பில் உள்ள தனது தொகுதி மக்களுக்கும் இலங்கைக்கும் உண்மையாகப் பணியாற்றவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (04)

## நாட்டின் எதிர்காலம் தொழிநுட்பம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

டிஜிட்டல் பொருளாதாரத்தை நோக்கி நாட்டை நகர்த்தும் திட்டத்தை விரைவுபடுத்தும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

அத்தோடு, தகவல் தொழிநுட்ப தொழில் முயற்சியை ஊக்குவிக்கும் வகையில் புதிய தொழிநுட்பங்கள் குறித்து அறிவை வழங்குதல், திறன் மேம்பாடு, தொழில் ஆலோசனை மற்றும் தொழில் வாய்ப்புகளை வழங்குவதே இதன் நோக்கமாகும்.

மேல்மாகாணத்தில் கற்கும் பாடசாலை மாணவர்கள், அரச மற்றும் தனியார் பல்கலைக்கழகங்கள், தொழிற்கல்வி நிறுவன மாணவர்கள், தொழில் வாய்ப்புகளை எதிர்பார்த்துள்ளவர்கள், தொழில் முயற்சியாளர்களை தெளிவூட்டும் நோக்கில் இந்த கண்காட்சி நடத்தப்படுகிறது. (04)

## ஜனாதிபதித் தேர்தலை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போடுவது குறித்து எங்கும் கருத்து வெளியிடப்படவில்லை, சமூகத்தில் இருந்தும் அவ்வாறானதொரு கோரிக்கை விடுக்கப்படவில்லை. எனினும், தேர்தலை ஒத்திவைக்க முயற்சி எடுக்கப்பட்டால் அதற்கு ஆதரவு வழங்கபோவதில்லை. தேர்தல் உரிமையைப் பெறுவதற்காக எல்லா வழிகளிலும் நடவடிக்கை எடுக்கப்படும்.” - என்றார். (அ)

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்



# தேசிய இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர்களுக்கு திறன் அபிவிருத்திக்கான 3 நாள் வதிவிடப் பயிற்சி



(நூருல் ஹுதா உமர்)

இளைஞர் விவகார விளையாட்டு அமைச்சும், தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் இணைந்து ஒழுங்கு செய்த கிழக்கு மாகாண உத்தியோத்தர்களுக்கான திறன் அபிவிருத்தி வளர்ப்பது சம்பந்தமான மூன்று நாள் வதிவிட பயிற்சிநெறி கிழக்கு மாகாணப் பணிப்பாளர் சரத் சந்திரபால தலைமமையில் மட்டக்களப்பு சத்துருகொண்டான் சர்வோதய கல்வி பயிற்சி நிலையத்தில் இன்று ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நிர்வாக பணிப்பாளர் மனுல சமல் பெரேராவும் விசேட அதிதிகளாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பயிற்சி பிரதிப் பணிப்பாளர் விறாஜ் கபில, நிருவாக பிரிவு உதவிப் பணிப்பாளர் நிர்மலி, கிழக்கு மாகாண கணக்காளர் சஜித் குணசேகர, நிர்வாக உத்தியோகத்தர் பி.தியாகராஜா, மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் திருமதி கலாராணி ஜெயசுதாசன் மற்றும் உயர் தொழிநுட்பக் கல்லூரிப் பணிப்பாளர் ஜெயபாலன் ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

வளத்திறன் மிக்க நிலைத்து நிற்கக் கூடிய சமுதாயத்தில் அபிவிருத்தியுடன் வாழ்வதற்கு தேவையான அறிவுத் திறன் விழுமியம் மற்றும் மனப்பான்மை அணுகு முறைகள் தொடர்பாகப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இம்மூன்று நாள் வதிவிடப் பயிற்சி நெறியில் கிழக்கு மாகாணத்தின் அம்பாறை, மட்டக்களப்பு, திருக்கோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.



# விபுலானந்த மணிமண்டபம் கல்முனையில் திறக்கப்பட்டது

(காரைதீவுச் செய்தியாளர்)

கல்முனை இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தில் மீளப்புனரமைக்கப்பட்ட விபுலானந்த மணிமண்டபம் இன்று காலை அதிபர் திருமதி விஜயசாந்தினி நந்தபால தலைமையில் கோலாகலமாகத் திறந்து வைக்கப்பட்டது.

சிவஸ்ரீ சச்சிதானந்தசிவக்குருக்கள், கல்முனை வலயப் பிரதிக்கல்வி பணிப்பாளர் திருமதி வரணியா சாந்தரூபன், கோட்டக்கல்விப்பணிப்பாளர் ச.சரவணமுத்து, உதவிக் கல்விப் பணிப்பாளர்களான ஆ.சஞ்சீவன் வி.ரி.சகாதேவராஜா கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினரும் சமூகச் செயற்பாட்டாளருமான சந்திரசேகரம் ராஜன் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

அதிதிகள் பாண்ட் வாத்தியம், தமிழ் இன்னியம் சகிதம் வரவேற்கப்பட்டு பின்னர் மண்டபப் பெயர்ப்பலகை திரைநீக்கம் செய்து, நாடாவெட்டி விபுலானந்த மணி மண்டபம் திறந்துவைக்கப்பட்டது. மாணவர்கள், ஆசிரியர்களின் கலை நிகழ்ச்சிகள் மேடையேறின.

கடந்த 5 வருடங்களாக விபுலானந்தா மணி மண்டபம் பழுதடைந்த நிலையில் இருந்த வேளையில், கல்முனை முன்னாள் மாநகர சபை உறுப்பினர் சந்திரசேகரன் ராஜனின் வேண்டுகோளுக்கிணங்க லண்டனில் வாழும் பாண்டிருப்பைச்சேர்ந்த திருமதி வனிதா இராஜகுமார் சுமார் 20 லட்சம் ரூபாய் செலவில் மணிமண்டபத்தை மீள அமைத்துக் கொடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கல்முனை மாநகர சபையினால் நூராணியா மையவாடி சிரமதானம்

(ஏ.எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபையின் சேவை விநியோக மேம்பாட்டு திட்டத்தின் கீழ், கல்முனை நூராணியா மையவாடியைச் சிரமதானம் மூலம் துப்பரவு செய்யும் வேலைத் திட்டம் நேற்றுச் செவ்வாய்க் கிழமை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, இம்மையவாடியானது மாநகர சபை ஊழியர்களினால் முழுமையாகத் துப்பரவு செய்யப்பட்டு, கழிவுகள் யாவும் திண்மக் கழிவகற்றல் வாகனங்கள் மூலம் அகற்றப்பட்டுள்ளன.

மாநகர சபையின் தொழிநுட்ப உத்தியோகத்தர்களான எம்.அமீர், எம்.எம். நிஸார் மற்றும் மேற்பார்வையாளர்கள் சிரமதானப் பணிகளை நெறிப்படுத்தியிருந்தனர்.

கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மியின் விசேட ஆலோசனை, வழிகாட்டலில் நடைமுறைப் படுத்தப்படும் இவ்வேலைத் திட்டம், கல்முனைத் தமிழ்ப் பிரிவு இந்து மயானத்தில் சில தினங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இவ்வேலைத்திட்டம் மருதமுனை, சாய்ந்தமருது மற்றும் நற்பிட்டிமுனை போன்ற பகுதிகளிலும் முன்னெடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.





# ஹமாஸ் படையினருக்குப் பதிலடி! காஸாவில் இஸ்ரேல் குண்டு மழை!!

தங்கள் நாட்டுக்குள் ஊடுருவி இதுவரை இல்லாத மிகப் பெரிய தாக்குதலை நடத்தியுள்ள ஹமாஸ் படையினருக்குப் பதிலடியாக, அவர்களது கட்டுப்பாட்டில் உள்ள காஸா பகுதியில் தனது குண்டுவீச்சை இஸ்ரேல் செவ்வாய்க்கிழமை தீவிரப்படுத்தியது. அதையடுத்து, அந்தப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களைத் தேடித் தவித்து வருவதாக அசோசியேட்டட் பிரஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

யாரும் எதிர்பாராத வகையில் இஸ்ரேலுக்குள் அதிரடியாக நுழைந்து ஹமாஸ் படையினர் சனிக்கிழமை நடத்திய தாக்குதலுக்குப் பதிலடியாக, காஸா பகுதியில் போர் விமானங்கள் மூலம் இஸ்ரேல் பாதுகாப்புப் படை அன்றிலிருந்தே தாக்குதல் நடத்தி வருகிறது.



சனிக்கிழமை நடத்தப்பட்ட விமானத் தாக்குதலின் 17 ஹமாஸ் ராணுவ நிலைகள் மீதும், 4 நிர்வாக மையங்கள் மீதும் குண்டுகள் வீசப்பட்டன. மேலும், காஸா சிட்டியிலுள்ள ஹமாஸ் வானொலி நிலையம் இயங்கி வந்த 11 மாடி அடுக்குக் கட்டடம் தரைமட்டமாக்கப்பட்டது. காயமடைந்த ஹமாஸ் படையினர் சிகிச்சை பெற்றுவந்ததாகக் கருதப்பட்ட இரு மருத்துவமனைகள் மீதும் இஸ்ரேல் விமானங்கள் தாக்குதல் நடத்தின. இதில் அவசரகால ஊர்தி ஓட்டுநரும், செவிலியரும் கொல்லப்பட்டனர்.

இரண்டாவது நாளாக ஞாயிற்றுக்கிழமையும் காஸா பகுதியில் தாக்குதலைத் தொடர்ந்த இஸ்ரேல் படை, முந்தைய நள்ளிரவு முழுவதும் 426 இடங்களில் குண்டுகளை வீசியது. இதில் பெயிட் ஹனுன் நகரம் ஏறத்தாள முழுமையாகத் தரைமட்டமானது. பெரும்பாலும் குடியிருப்புகள், ஹமாஸ் அதிகாரிகளின் இல்லங்கள், அந்தப் பகுதியில் இணையத்தளச் சேவையை அளித்து வந்த வதன் கோபுரம் ஆகிவற்றைக் குறிவைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் உயிரிழந்தவர்களில் பெண்கள் குழந்தைகள் உள்ளிட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 19 பேரும் அடங்குவர்.

கடந்த 1973 க்குப் பிறகு முதல்முறையாக இஸ்ரேலில் ராணுவ அவசரநிலையைப் பாதுகாப்பு அமைச்சரவை அதிகாரபூர்வமாக ஞாயிற்றுக்கிழமை அறிவித்தது. அதன்பிறகு ஞாயிற்றுக்கிழமை இரவு முதல் திங்கட்கிழமை அதிகாலை வரை காஸா பகுதியில் சுமார் 500 இடங்களில் இஸ்ரேல் விமானங்கள் தாக்குதல் நடத்தின. அந்த இடங்களில், 90 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அகதிகள் தங்கியுள்ள அல்-ஷாட்டி முகாமும், ஜபாலா முகாமிலுள்ள சந்தையும் அடங்கும்.

ஜபாலா முகாம் சந்தையில் இஸ்ரேல் விமானங்கள் குண்டு வீச்சு நடத்தியபோது, அந்தச் சந்தையில் பொது மக்கள் கூட்டமாக இருந்தனர். இந்தத் தாக்குதல்களில் குழந்தைகள் உள்பட ஏராளமானவர்கள் உயிரிழந்தனர். அதே நாளில் காஸா பகுதியை முழுமையாக முற்றுகையிட இஸ்ரேல் பாதுகாப்புத் துறை அமைச்சர் யோயவ் காலன்ட் உத்தரவிட்டார். அந்தப் பகுதிக்கு ஏற்கெனவே மின்சார விநியோகம் தடுத்து நிறுத்தப்பட்டிருந்த நிலையில், இந்த உத்தரவுக்குப் பிறகு காஸாவுக்குள் உணவுப் பொருள்கள், எரிபொருள் போன்ற அத்தியாவசியப் பொருள்கள் செல்வதற்கும் தடை ஏற்படுத்தப்பட்டது.

இதற்கிடையே, ஹமாஸ் படையினரால் ஊடுருவப்பட்ட தங்கள் நாட்டுப் பகுதிகள் அனைத்தையும் இஸ்ரேல் ராணுவம் மீட்டது. இந்த நிலையில், நான்காவது நாளாக காஸா பகுதியில் இஸ்ரேல் விமானங்கள் இதுவரை இல்லாத அளவுக்கு மிகத் தீவிரமாக குண்டுவீச்சு நடத்தின.

முன்னதாக, தொலைக்காட்சியில் உரையாற்றிய இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, 'நம்மிடமிருந்து போரை எதிர்பார்த்துத்தான் ஹமாஸ் படையினர் தாக்குதல் நடத்தினர். அவர்களுக்குத் தேவையான போரை அவர்கள் மீது தொடர்ந்துள்ளோம். ஹமாஸ் அமைப்பு இஸ்லாமிய தேச (ஐஎஸ்) அமைப்பைவிட மிகவும் கொடூரமானதாகும். அந்த அமைப்புக்கு நாம் அளிக்கும் பதிலடி, இன்னும் பல தலைமுறைகளுக்குத் தாக்கத்தை ஏற்படுத்துவதாக இருக்கும்' என்று எச்சரித்திருந்தார்.

அதை உறுதிப்படுத்தும் வகையில், காஸா பகுதியில் இஸ்ரேல் போர் விமானங்கள் இதுவரை இல்லாத அளவுக்கு மிகத் தீவிரமான தாக்குதலை செவ்வாய்க்கிழமை நடத்தின. இனி வரும் நாள்களில் இந்தத் தீவிரம் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்கெனவே இஸ்ரேலின் முற்றுகையால் உணவு, குடிநீர் மற்றும் பிற அத்தியாவசியப் பொருள்களின் பற்றாக்குறையை எதிர்நோக்கியுள்ள சிறிய பரப்பளவைக் கொண்ட காஸாவில், வான்வழித் தாக்குதல் தீவிரமாகி வருவது நிலைமையை மேலும் மோசமாக்கும் என்று கூறப்படுகிறது.

இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த காஸா பகுதியில் இருந்து அந்த நாடு கடந்த 2005 ஆம் ஆண்டு வெளியேறியது. அதன் பிறகு பாலஸ்தீனத்துக்கு நடைபெற்ற தேர்தலில், தீவிர நிலைப்பாட்டைக் கொண்ட ஹமாஸ் அமைப்பு காஸா பகுதியில் வெற்றி பெற்றது. அதையடுத்து அந்தப் பிராந்தியத்திலிருந்த ஃபட்டா அரசை ஹமாஸ் பலவந்தமாக அகற்றியது. தற்போது மேற்குக் கரை பகுதியில் ஃபட்டா அமைப்பு ஆட்சி செலுத்து வருகிறது.

இருந்தாலும், காஸா பகுதியை ஆண்டு வரும் ஹமாஸ் ஆயுதக் குழுவினருக்கும், இஸ்ரேல் படையினருக்கும் இடையே தொடர்ந்து பதற்றம் நிலவி வருகிறது. இஸ்ரேல் மீது ஹமாஸ் படையினர் ராக்கெட் தாக்குதல் நடத்துவது, அதற்குப் பதிலடியாக காஸாவில் ஹமாஸ் நிலைகள் மீது இஸ்ரேல் வான்வழித் தாக்குதல் நடத்துவது, காஸாவுக்கு அத்தியாவசியப் பொருள்கள் செல்வதற்கு இஸ்ரேல் தடை ஏற்படுத்துவது போன்ற நிகழ்வுகளால் இந்தப் பதற்றம் பல மடங்கு அதிகரிக்கிறது. சில நேரங்களில் இது பெரும் போராக உருவெடுத்துள்ளது.

இந்தச் சூழலில், ஹமாஸ் மற்றும் மற்ற ஆயுதக் குழுவினர் காஸா பகுதியிலிருந்து இஸ்ரேல் மீது ஆயிரக்கணக்கான ராக்கெட் குண்டுகளை வீசி சனிக்கிழமை தாக்குதல் நடத்தினர். அதைத் தொடர்ந்து இஸ்ரேலுக்குள் நிலம், கடல், வான் வழியாக 22 இடங்களில் ஊடுருவிய சுமார் 1,000 ஹமாஸ் அமைப்பினர், சுமார் 25 கி.மீ. வரை உள்ளே நுழைந்து பொதுமக்களையும், ராணுவத்தினரையும் சுட்டுக் கொன்றனர். இது தவிர, பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் எனப் பலரை ஹமாஸ் படையினர் பிணைக் கைதிகளாகப் பிடித்தனர். அவர்கள் காஸா பகுதிக்குக் கொண்டுசெல்லப்பட்டனர்.

ஹமாஸ் படையினர் நடத்திய தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்தைக் கடந்துள்ளதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது. இது குறித்து அமெரிக்காவிலுள்ள இஸ்ரேல் தூதரகம் செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில், ஹமாஸ் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 1,008 ஆக அதிகரித்துள்ளதாகத் தெரிவித்துள்ளது. (04)

# ஆப்கானிஸ்தானில் மீண்டும் சக்திவாய்ந்த நில நடுக்கம்!

ஆப்கானிஸ்தானில் இன்று காலை மீண்டும் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவுகோலில் 6.1 அலகுகளாகப் பதிவாகியுள்ளது என்று ஆப்கன் தேசிய நில அதிர்வு மையம் (என்சிஎஸ்) தெரி வித்துள்ளது.

ஆப்கன் தேசிய நில அதிர்வு மையத் தகவலின்படி, காலை 6.11 க்கு பூமிக்கு அடியில் 10 கிலோ மீற்றர் ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவில் 6.1 அலகுகளாகப் பதிவாகியுள்ளது. இந்த நடுக்கத்தால் ஏற்பட்ட பாதிப்புகள் மற்றும் உயிரிழப்புகள் குறித்த தகவல்கள் எதுவும் இதுவரை வெளியாகவில்லை.

ஏற்கனவே நிலநடுக்கத்தால் நான்காயிரத்திற்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ள நிலையில், தற்போது மீண்டும் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது அந்த நாட்டு மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

ஆப்கானிஸ்தானின் ஹெராத் நகருக்கு வடமேற்கே 40 கி.மீ. தொலைவில் சனிக்கிழமை சக்திவாய்ந்த நிலநடுக்கம் எற்பட்டிருந்தது. ரிச்டர் அளவுகோலில் இந்த நிலநடுக்கம் 6.3 அலகுகளாகப் பதிவானது. அதைத் தொடர்ந்து, மூன்று முறை கடுமையான நிலநடுக்கங்களும், குறைந்த அளவிலான நில அதிர்வுகளும் ஏற்பட்டன.



நிலநடுக்கம் மற்றும் அதன் பின்னதிர்வுகளால் கட்டடங்கள் இடிந்து விழுந்தில் பலியானோரின் எண்ணிக்கை 4000 ஆக உயர்ந்துள்ளது. சுமார் 20 கிராமங்களில் 1,983 முதல் 2,000 வீடுகள் முழுமையாக இடிந்து தரைமட்டமாகியுள்ளன. 10,000 க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர். 1000 க்கும் மேற்பட்டோரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது.

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதியில் ஒரு அரச மருத்துவமனை மட்டுமே உள்ளது. நிலநடுக் கத்தால் பாதிக்கப்பட்ட பகுதியில் தேசிய மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த 35 குழுக்கள், உள்ளூர் வாசிகள் மற்றும் தன்னார்வலர்கள் என 1000 க்கும் மேற்பட்டோர் இடிபாடுகளுக்குள் உயிருடன் சிக்கியிருக்கக்கூடியவர்களைத் தேடுவதிலும் மீட்புப் பணிகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

ஹெராத் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி, உணவு மற்றும் மருத்துவ உதவிகளை வழங்குவதாக ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் உலக சுகாதார அமைப்பு ஆகியன உறுதியளித்துள்ளன. (04)



# மியான்மர் அகதி முகாமில் ராணுவம் வான்வழித் தாக்குதல் – 29 பேர் பலி!

மியான்மரின் வடக்கு மாகாணமான கச்சினில் புலம் பெயர்ந்த உள்நாட்டு அகதிகள் முகாமில் ராணுவம் நடத்திய வான்வழித் தாக்குதலில் 29 பேர் உயிரிழந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்து கச்சின் விடுதலைப் படை என்ற அமைப்பின் செய்தித் தொடர்பாளர் கூறுகையில், இறந்தவர்களில் 11 பேர் 16 வயதுக்குட்பட்டவர்கள் என்றும், இந்தத் தாக்குதலில் 57 பேர் காயமடைந்ததாகவும் கூறினார்.

தொலைதூர ஏறிகணை மூலம் அந்த முகாமில் தாக்குதல் நடத்தப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

தேர்தலில் முறைகேடு நடைபெற்றதாகக் கூறி, மியான்மரில் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆங் சான் சூகியின் தலைமையிலான அரசை, ராணுவம் கடந்த 2021 ஆம் ஆண்டு கலைத்துவிட்டு ஆட்சியைக் கைப்பற்றியது.

அதன் பிறகு, தனது அரசுக்கு எதிரான ஆயுதக் குழுக்களை அழிப்பதற்காக இதுபோன்ற கண்மூடித்தனமான தாக்குதல்களை ராணுவம் நடத்தி வருவதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது. (04)

# பாடசாலைச் சுகாதாரக் கழகத்தினருக்கு சுகாதார மேம்பாட்டுச் செயலமர்வு



(நூருல் ஹுதா உமர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் அவர்களின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய பணிமனைக்குட்பட்ட சுகாதார நிறுவனங்களின் ஊடாக பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில், நாவிதன்வெளி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பாடசாலைச் சுகாதாரக் கழகங்களில் உள்ளவர்களுக்கு சுகாதார மேம்பாடு தொடர்பான செயலமர்வு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இடம்பெற்றது.

குறித்த செயற்றிட்டத்தின் கீழ் அமைந்த தேசிய ரீதியானதும் பிராந்திய ரீதியானதுமான முதலாவதான இச்செயலமர்வில் நாவிதன்வெளி பிரதேச பாடசாலைகளின் அதிபர்கள், பாடசாலை சுகாதார கழக ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள், பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள், பொதுச் சுகாதாரத் தாதியர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எம்.பீ. முஹம்மட் சில்மி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவுப் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.ஏ.சீ.எம்.பஸால், பிராந்திய பொதுச் சுகாதார மற்றும் தர முகாமைத்துவப் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.ஏ.எம்.ஹில்மி, வாய்ச்சுகாதார வைத்திய நிபுணர் டொக்டர் எம்.எச்.கே. சரூக், பிராந்திய மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் ஐ.எல்.எம். லாபீர் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின்போது, கோட்ட மட்டத்திலான பாடசாலை சுகாதார கழக மேம்பாட்டுக் குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. இக்குழு மாதாந்தம் ஒன்றுகூடி தொடர் செயற்பாடு பாடசாலைகளில் உள்ள சுகாதார கழகங்களை ஒழுங்கமைத்து அதனை வலுவூட்டி மாணவர்கள் மத்தியில் சுகாதார பழக்க வழக்கங்களை ஏற்படுத்துவது தொடர்பாகவும் இதன்போது அவதானம் செலுத்தப்பட்டது.

# திருமணமாகவுள்ள தம்பதிகளுக்கு உளவளத் துணைப் பயிலமர்வு



ஐஆஉமு ஊயயெனய (ஐபேமு) இன் நிதியுதவியுடன், கிளிநொச்சி உளநலச் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் புதிதாகத் திருமணமாகவுள்ள தம்பதிகளுக்கு திருமணத்திற்கு முன்னரான திருமணத்திற்கு தயார்படுத்துவதற்கான மூன்று நாள் உளவளத்துணைப் பயிற்சிப் பயிலமர்வு நடாத்தப்பட்டது.

யாழ்ப்பாணத்திலும், கிளிநொச்சியிலும் அரச துறையில் பணியாற்றும் துறைசார் நிபுணர் குழுவினர் இப்பயிலமர்வில் வளவாளர்களாகப் பங்கேற்றனர்.

இதில், புதிதாக திருமணமாகவுள்ள 30 தம்பதிகள் கலந்துகொண்டு இப்பயிற்சியைப் பெற்றுக் கொண்டனர்.

எதிர்காலத்தில் பால்நிலைசார் வன்முறையற்ற சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் நோக்குடனும், ஆரோக்கியமான பால்நிலைப் புரிதலுடன் கூடிய திருமண வாழ்வை மேம்படுத்தும் நோக்குடனும் இந்த உளவளத்துணைப் பயிற்சிப் பயிலமர்வு ஒழுங்கமைக்கப்பட்டது. (O1)




# 1000 இலவச மூக்குக் கண்ணாடிகள் கல்முனை ரோட்டரி வழங்குகிறது!



(வி.ரி. சகாதேவராஜா)

கல்முனை றொட்டரிக் கழகம், அவுஸ்ரேலிய Global Hand Charity அமைப்பின் அனுசரணையுடன் 1000 மூக்குக் கண்ணாடிகளை இலவசமாக வழங்கவுள்ளது.

கண்ணாடிக்கான தேவையிருந்தும் அதனைப் பெற்றுக்கொள்ள வசதியில்லாத வறுமைக்கோட்டின் கீழ் இருக்கின்றவர்களுக்கு இக்கண்ணாடிகள் வழங்கப்படும், என்று கல்முனை ரோட்டரிக் கழக அங்கத்தவர் ரோட்டரியன் மு. சிவபாதசுந்தரம் தெரிவித்தார்.

ஏற்கனவே கண்ணைப் பரீட்சித்து மருத்துவச் சீட்டினை வைத்திருப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும், என்றும் அவர் குறிப்பிட்டார்.

இவேலைத்திட்டமானது, 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26, 27ந் திகதிகளில் கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையில் அவுஸ்ரேலிய வைத்தியர்களினால் கல்முனை கண் வைத்தியர்களின் பங்களிப்புடனும் மேற்கொள்ளப்படும்.

இவ்வேலைத்திட்டம் குறிப்பாக கரையோரப் பிரதேசத்தைச் சார்ந்த 13 பிரதேச செயலகப் பகுதிகளை உள்ளடக்கியுள்ளதாகத் திட்டமிடப்பட்டுள்ளது.

# அமெரிக்காவிலுள்ள சீனத் தூதரகத்தில் காரைக் கொண்டு மோதியவர் மரணம்



அமெரிக்காவிலுள்ள சீனத் துணைத் தூதரகத்தில் காரை மோதியவரை பொலிஸார் சுட்டுக் கொன்றனர்.

அந்த நாட்டின் சான் பிரான்ஸ்சிஸ்கோ நகரிலுள்ள சீனத் துணைத் தூதரகத்தின் மீது காரை மோதச் செய்த ஒருவர், விசா அலுவலகத் தின் வாயில் கதவுகளை அந்தக் காரால் மோதி உடைத்து உள்ளே நுழைந்தார். இதையடுத்து, அந்தப் பகுதியில் கூச்சலும் குழப்பமும் நிலவியது.

தகவலறிந்து அந்தப் பகுதிக்கு விரைந்த பொலிஸார், காரை ஒட்டி வந்த நபருடன் பேச்சுவார்த்தை நடத்தினர். இருந்தாலும் அப்போது ஒரு காவலர் சுட்டதில் அந்த நபர் காயமடைந்தார். பின்னர் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார். இது தொடர்பாக புலனாய்வு அதிகாரிகள் விசாரணைகளைத் தொடங்கியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# ஐ.நா சுற்றுச்சூழல் நிகழ்வில் நிப்பொன் பெயின்ட் லங்கா!













ஆசிய பசுபிக் அமைச்சர்கள் மற்றும் சுற்றுச்சூழல் அதிகாரிகள் மன்றத்தின் ஐந்தாவது அமர்வு அண்மையில் கொழும்பில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், நிப்பொன் பெயின்ட் லங்கா நிறுவனமும் ஒரு பெருமைமிக்க பங்கேற்பாளராக இணைந்திருந்தது.

உலகம் முழுவதிலுமிருந்து 30 சுற்றுச்சூழல் அமைச்சர்களை ஒன்றிணைத்த இந்த முக்கிய நிகழ்வு, இலங்கையின் நிலைத்தன்மையைப் பேணுவதற்கான செயற்பாடுகளில் தனது பங்களிப்பை நிப்பொன் பெயின்ட் லங்கா வெளிப்படுத்துவதற்கான சிறந்தொரு வாய்ப்பாக அமைந்தது. (04)

## அலட்சியமாக செயல்படும் பதிவாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப் பணிப்புரை

பிறப்பு, திருமணம் மற்றும் இறப்புச் சான்றிதழ்களை எழுதும்போது கவனவீனமாகச் செயற்படும் பதிவாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த, பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் உயர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

பதிவாளர் நாயகத் திணைக்கள அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலிலொன்றின்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பிறப்பு, திருமணம், இறப்பு ஆகிய சான்றிதழ்களை எழுதும் போது மிகவும் கவனமாக இருக்க வேண்டும் எனவும் சில சமயங்களில் பதிவாளர்களின் அலட்சியத்தால் பிழைகள் ஏற்படுவது தெரிய வந்துள்ளதாகவும், பிறப்பு, திருமணம் மற்றும் இறப்புச் சான்றிதழ்களின் அசல் சான்றிதழ்களில் பிழைகள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு விசேட வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டுமெனவும் அவர் அங்கு வலியுறுத்தியுள்ளார்.



இக்கலந்துரையாடலில் பதிவாளர் நாயகம் சமந்த விஜயசிங்க, சிரேஷ்ட உதவிச் செயலாளர் ஏ. டி. டபிள்யூ. குமாரசிங்க உட்பட பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் பல உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர். (ரெ-18)

## நோய்களுக்கு 5 வகைக்கு மேற்பட்ட மருந்துகளை அருந்துவது ஆபத்தானது!

### சிறப்பு மருத்துவ நிபுணர் பரண மில்லவித்தான

நோய்களுக்கு ஐந்து வகைக்கு மேற்பட்ட மருந்துகளை உட்கொள்ளும் முதியவர்களுக்கு வேறு கோளாறுகள் ஏற்படும் அபாயம் உள்ளதாக உடல் நோய் சிறப்பு மருத்துவ நிபுணர் டொக்டர் பரண மில்லவித்தான தெரிவித்தார்.

இதன் காரணமாக முதியவர் ஒருவர் நோய்க்கு ஆளாகினால் அவருக்கு ஐந்து வகைக்கு மேற்பட்ட மருந்துகளை வழங்கினால் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

உலக முதியோர் தினத்தை முன்னிட்டு கொழும்பிலுள்ள சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதற்கமைய, இவ்வாறு பாதிக்கப்படுவோருக்கு உடல் உபாதைகளுக்கு மேலதிகமாக மனச்சோர்வு, டிமென்ஷியா போன்ற மனநலக் கோளாறுகள் ஏற்படும் அபாயம் அதிகம் இருப்பதாகவும் அவர் எச்சரிக்கை செய்தார்.

இங்கு உரையாற்றிய சிறப்பு நிபுணர் கலாநிதி ஷிரோமி மதுவகே, உலகில் மிக விரைவாக முதுமையை அடையும் எண்ணிக்கையைக் கொண்ட நாடாக இலங்கை காணப்படுவதாகவும், முதியோர்களைச் சரியான முறையில் இனங்கண்டு அவர்களைக் காத்திட்டால் அது நாட்டின் வளமாக அமையும் எனவும் குறிப்பிட்டார்.

நாட்டில் அதிகளவான முதியோர் மேல் மாகாணத்தில் இருப்பதாகவும் கிராமப்புறங்களில் முதியோர் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ரெ-20)


JRIDE
BEYOND THE ROAD
ONLINE TAXI APP
FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக
உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN
EASILY
REGISTER &
BOOK
YOUR RIDE
GET IT ON
Google Play
Download on the
App Store
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

# போக்குவரத்துப் பொலிஸாரின் உயிரைக் காத்திடுங்கள்! வாகனச் சாரதிகளிடம் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் வேண்டுகோள்

வீதிப் போக்குவரத்துக் கடமைகளில் ஈடுபடும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் உயிரைப் பாதுகாக்கும் வகையில் வாகனங்களைச் செலுத்துமாறு அனைத்துச் சாரதிகளையும் பொலிஸ் தலைமையகம் கேட்டுக் கொண்டுள்ளது.

கொழும்பு சுதந்திரச் சதுக்கத்திற்கு அருகில் கவனக் குறைவாக செலுத்தப்பட்ட வாகனம் மோதி பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்தமை தொடர்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்.

சில சாரதிகள் மிகவும் கவனக்குறைவாக வாகனங்களைச் செலுத்துவது துரதிர்ஷ்டவசமானது எனவும், சாரதிகள் ஒழுக்கத்துடன் வீதியில் வாகனங்களைச் செலுத்துமாறும் அவர் இதன்போது கேட்டுக்கொண்டார்.

இதேவேளை, நாடு முழுவதிலும் சுமார் 9,000 பொலிஸ் உத்தியோகத்தர்கள் வீதிப் போக்குவரத்துக் கடமைகளில் ஈடுபட்டு வருவதாகவும், அவர்களில் சுமார் 4,500 பேர் தினமும் வீதிகளில் நின்றவாறு பணியாற்றுகின்றனர் எனவும் அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின்போது கொழும்புப் போக்குவரத்துப் பிரிவின் பிரதிப் பொலிஸ் மா அதிபர் இந்திக ஹப்புகொட தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ரெ-19)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குருசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.10.2023இல் வெளியிடப்பெற்றது.